**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 338/2024**
**வழக்கு சாட்சி PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வான்மதி | தாலுகா | : | வீ.கே.புதூர் |
| தந்தை பெயர் | : | முருகன் | தொழில் | : | செவிலியர் |
| கிராமம் | : | அண்ணாமலைப்புதூர் | வயது | : | 28 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of July 31st, 2025.

**(எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் அண்ணாமலைப்புதூரில் குடியிருந்து வருகிறேன். நான் செவிலியராக பணிபுரிந்து வருகிறேன். எதிரிகள் மாரியப்பன் மற்றும் முத்துசெல்வத்தை எனக்கு தெரியும். நான் என் அம்மாவுடன் அண்ணாமலைப்புதூரில் குடியிருந்து வந்தேன். என் அப்பா நான் சிறுவயது இருக்கும் போதே இறந்து விட்டார். நான் என் பாட்டி வீட்டில் வளர்ந்தேன். 1ம் எதிரி மாரியப்பன் எனது மாமா உறவு முறை ஆவார். 2ம் எதிரி முத்துசெல்வம் அவரின் நண்பராவர். எதிரி மாரியப்பன் என்னை காதலிக்கிறேன் என்று சொல்லி எனது பாட்டி வீட்டிற்கு அடிக்கடி வந்து தொந்தரவு செய்துள்ளார். பின்னர், எங்கள் வீட்டில் குறுவன்கோட்டையை சேர்ந்த ஜெகதீஷ் என்பவருக்கு என்னை திருமணம் செய்து வைப்பதற்காக பேசினார்கள். 11.07.2016ம் தேதியன்று மாலையில் பூ வைப்பதற்காக பேசினார்கள். 10.07.2016ம் தேதியன்று நானும், எனது மாமா

மகள் செல்வியும் எங்கள் வீட்டில் வைத்து பேசிக்கொண்டிருந்தோம். என் அம்மா மறுநாள் பூ வைக்கும் பங்சனுக்காக சாமான்கள் வாங்க கடைக்கு சென்று விட்டார்கள். அப்போது, எதிரிகள் இருவரும் சிவப்பு கலர் பேஷன் பைக்கில் வந்து, எங்கள் வீட்டின் முன்பு பைக் நிறுத்தினார்கள். வீட்டிற்குள் எதிரி மாரியப்பன் நுழைந்து நீ வேறு யாரையாவது கல்யாணம் செய்ய போகிறாயா? என்று கேட்டார். அப்போது, நீ போய் விடு, என் அம்மா இல்லை என்று சொன்னேன். பின்னர், அவர் சட்டைக்கு பின்னால் வைத்திருந்த அரிவாளை எடுத்து, எனக்கு கிடைக்காத நீ, வேறு யாருக்கும் கிடைக்கக்கூடாது, இத்தோடு நீ செத்து போ, என்று சொல்லி என்னை கழுத்தில் வெட்டினார். நான் விலகிக்கொண்டதினால் அந்த வெட்டு என் இடது காதின் அடிப்பக்கத்தில் பட்டது. பின்னர், மீண்டும் அரிவாளால் வலது தோள்பட்டை, இடது தோள்பட்டையில் வெட்டினார். நான் வெட்டாதே, என்று கத்தினேன். திரும்பவும் என்னை வெட்டினார். நான் கைகளால் தடுத்தேன். அந்த வெட்டு என்னுடைய இடது கையின் மணிக்கட்டு பகுதியில் பட்டது. மேலும், வலது கை நடுவிரலிலும் பட்டது. நானும், செல்வியும் கத்தினோம். பக்கத்து வீட்டிலிருந்து மாரியம்மாள் வந்தார். அவர் என்னை எதிரி வெட்டிக்கொண்டிருப்பதை பார்த்து தடுத்தார். அப்போது, அநத வெட்டு மாரியம்மாளின் இடது பெருவிரலில் பட்டது. நாங்கள் 3 பேரும் கத்தியவுடன் முத்துசெல்வம் வீட்டிற்குள் வந்தார். பின்னர் 2 எதிரிகளும் வேறு யாரையாவது நீ திருமணம் செய்தால் உன்னை குடும்பத்தோடு வெட்டி விடுவேன் என்று மிரட்டி விட்டு சென்றார்கள். அதன் பின்பு என்னை எனது மாமா பெரியசாமியும், எனது அம்மாவும் 108 ஆம்புலன்ஸ் மூலம் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். எனக்கு பலத்த காயம்

இருந்ததினால், நாகர்கோவில் சுஸ்ருதா மருத்துவமனையில் மேல்சிகிச்சை எடுத்துக்கொண்டேன். பின்பு அங்கு வந்த போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேன். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். நாகர்கோவில் சுஸ்ருதா மருத்துவமனையில் 2 வாரங்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் அரிவாளால் தான் என்னை எதிரி மாரியப்பன் வெட்டினார். அந்த அரிவாள் **சா.பொ.1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.01 18:23:52 +0530